**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 , திருப்பத்தூர் மாவட்டம்</u>**
**<u>முன்னிலை</u> : திரு.S.கோவேந்தன், B.A., LL.B., (Hons).,**
நீதித்துறை நடுவர் எண்.2,
திருப்பத்தூர்.

2026–ம் ஆண்டு ஜீன் மாதம் 05–ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.456/2022</u>**

**CNR.NO.TNTU020155062022**

அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,
கந்திலி காவல் நிலையம்,
திருப்பத்தூர் ...... புகார்தாரர்
குற்ற எண்.241/2022

// எதிரிடை//

A1.சதீஷ், த/பெ.தாமோதிரன்
A2.தனலட்சுமி, க/பெ.சதிஷ்
A3.வள்ளியம்மாள், க/பெ.தாமோதிரன் .... குற்றம் சாட்டப்பட்டர்கள்

(குற்றம்சாட்டப்பட்டவர்கள் வழக்கறிஞர் மூலம் வழக்கை எதிர்கொண்டனர்)

| | | |
|---|---|---|
| 1 | வழக்கு எண் | சி.சி.எண்.456/2022 |
| 2 | காவல் நிலையம் மற்றும் குற்ற எண் | கந்திலி காவல் நிலையம்,<br>குற்ற எண்.241/2022 |
| குற்றம் சாட்டப்பட்டவர்களின் விவரம் | | |
| 3 | பெயர் | A1.சதீஷ்,<br>A2.தனலட்சுமி<br>A3.வள்ளியம்மாள் |
| 4 | தந்தை பெயர் | A1.சதீஷ், த/பெ.தாமோதிரன்<br>A2.தனலட்சுமி, க/பெ.சதிஷ்<br>A3.வள்ளியம்மாள், க/பெ.தாமோதிரன் |
| 5 | தொழில் | – |
| 6 | முகவரி | A1–A3<br>செல்வனூர் கிராமம், பெரியகுனிச்சி அஞ்சல், திருப்பத்தூர் மாவட்டம். |


KOVENDHAN S
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

<table>
<tr><td>7</td><td>வயது</td><td colspan="3">–</td></tr>
<tr><td colspan="5">நாள்</td></tr>
<tr><td>8</td><td>குற்ற நிகழ்வு</td><td colspan="3">10.09.2022</td></tr>
<tr><td>9</td><td>புகார்</td><td colspan="3">10.09.2022</td></tr>
<tr><td>10</td><td>கைது செய்யப்பட்ட நாள்</td><td colspan="3">A1 – 13.09.2022</td></tr>
<tr><td>11</td><td>எதிரி பிணையில் வந்த நாள்</td><td colspan="3">A1 – 16.09.2022</td></tr>
<tr><td>12</td><td>வழக்கு துவங்கிய நாள்</td><td colspan="3">24.03.2026</td></tr>
<tr><td>13</td><td>விசாரணை முடிக்கப்பட்ட நாள்</td><td colspan="3">05.06.2026</td></tr>
<tr><td>14</td><td>தீர்ப்பு</td><td colspan="3">விடுதலை</td></tr>
<tr><td>15</td><td>தாமதத்திற்குரிய காரணம்</td><td colspan="3">–</td></tr>
<tr><td colspan="5">வழக்கின் நிலை</td></tr>
<tr><td>16</td><td>பிணைக்காலம்</td><td colspan="3">–</td></tr>
<tr><td>17</td><td>குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள்</td><td colspan="3">17.10.2022</td></tr>
<tr><td>18</td><td>பிரிவு 240 கு.ந.மு.வி. (முதல் கேள்வி)</td><td colspan="3">22.02.2023</td></tr>
<tr><td>19</td><td>பல்வகை மனுவின் மீது இந்நீதிமன்றத்தின் உத்திரவு</td><td colspan="3">Crl.MP No. 1003/2026 – Dismissed<br>நாள்: 24.03.2026</td></tr>
<tr><td rowspan="7">20</td><td rowspan="7">முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை</td><td>அரசு தரப்பு சாட்சி</td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா. 1</td><td>24.03.2026</td><td>–</td></tr>
<tr><td>அ.சா. 2</td><td>24.03.2026</td><td>–</td></tr>
<tr><td>அ.சா. 3</td><td>24.03.2026</td><td>–</td></tr>
<tr><td>அ.சா. 4</td><td>24.03.2026</td><td>–</td></tr>
<tr><td>அ.சா. 5</td><td>24.03.2026</td><td>–</td></tr>
<tr><td>அ.சா. 6</td><td>24.03.2026</td><td>24.03.2026</td></tr>
<tr><td>21</td><td>பிரிவு 313 கு.ந.மு.வி (வினாவல்)</td><td colspan="3">15.04.2026</td></tr>
<tr><td>22</td><td>தலைமறைவு எதிரிகளின்</td><td colspan="3">இல்லை</td></tr>
</table>



KOVENDHAN S
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

| | | |
|---|---|---|
| | விவரங்கள் / அவரது ஆஜர்/ஒப்படைப்பு | |
| 23 | மேலமை நீதிமன்றங்களால் பிறப்பிக்கபட்ட நிறுத்திவைப்பு உத்தரவு ஏதேனும் | இல்லை |

இவ்வழக்கு கடந்த 15.12.2022 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 05.06.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசுக்காக கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–2 அவர்களும், எதிரிக்கு கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.V.சிவாஜி B.A., B.L., அவர்களும், ஆஜராகியிருக்க, ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலினை செய்ததின் பேரில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

**(1)** இவ்வழக்கில் கடந்த 10.09.2022–ம் தேதி விடியற்காலை சுமார் 04.45 மணிக்கு குனிச்சி செல்வனூர் சின்னபையன் வீட்டிடம் புகார்தாரர் ரமேஷிற்கும், எதிரிகளுக்கும் நிலம் சம்மந்தமாக இருந்த முன்விரோதம் காரணமாக, 2–ம் எதிரி தனலட்சுமி, 3–ம் எதிரி வள்ளியம்மாள் ஆகியோர் புகார்தாரரின் அக்கா சாட்சி அமுதாவையும், 1–ம் எதிரி புகார்தாரரையும் பார்த்து அசிங்கமாகத் திட்டியதாலும், 1–ம் எதிரி புகார்தாரர் ரமேஷ், சாட்சி ஏழுமலை மற்றும் சாட்சி ராதா ஆகியோர்களை கையாலும், கட்டையாலும் சரமாரியாகத் தாக்கியதோடு, கையில் வைத்திருந்த கட்டையைக் காட்டி "சொத்து கேட்டு எங்கிட்ட வந்த உன்னையை குடும்பத்தோடு ஒழிச்சிடுவேன்" என்று மிரட்டியதாலும், 1–ம் எதிரி மீது இ.த.ச.பிரிவுகள்.294(b), 323, 324 (3Counts), 506(ii)–ன் கீழும், 2 & 3–ம் எதிரிகள் மீது இ.த.ச.பிரிவு.294(b)–ன் கீழும் இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



KOVENDHAN S
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

**(2)** இறுதி அறிக்கையை இந்நீதிமன்றம் கோப்புக்கு எடுத்துக்கொண்டு எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பி எதிரிகள் ஆஜரானவுடன் நகல்கள் வழங்கப்பட்டு, குற்றச்சாட்டு வனையப்பட்டு எதிரிகளிடம் வினவியபோது எதிரிகள் அதை மறுத்ததால் அரசு தரப்பில் சாட்சிகளை முன்னிலைப்படுத்த இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டது.

**(3)** அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.6** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8** வரையிலான ஆவணங்கள் மற்றும் **அ.சா.பொ.1** சான்றுப் பொருளும் வழக்கிற்கு ஆதாரங்களாகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**(4)** அரசு தரப்பு சாட்சியங்கள் முடிவுற்ற பிறகு, சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு எதிராக உள்ள சாட்சியங்கள் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 313(1)(b)–ன் கீழ் வினவியபோது எதிரிகள் "பொய் சாட்சியம்" என்றும், அவர்கள் தரப்பில் சாட்சிகள் இல்லை என்றும் கூறினர்.

**அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்.**

**(5)** அ.சா.1 கடந்த 10.09.2022 அன்று திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையிலிருப்பதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில், அங்கு சென்ற கந்திலி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் திரு.கணேசன் அ.சா.1 திரு.ரமேஷ் என்பவரை விசாரித்து (அ.சா.ஆ.2) புகார் வாக்குமூலம் பெற்று (அ.சா.ஆ.3) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, தனது புலன் விசாரணையை முடித்து, 1–ம் எதிரி மீது இ.த.ச.பிரிவுகள்.294(b), 323, 324 (3Counts), 506(ii)–ன் கீழும், 2 & 3–ம் எதிரிகள் மீது இ.த.ச.பிரிவு.294(b)–ன் கீழும் இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.



KOVENDHAN S
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

**இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சினை என்னவெனில், அரசு தரப்பில் 1–ம் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இ.த.ச.பிரிவுகள்.294(b), 323, 324(3 counts), 506(ii) of IPC மற்றும் 2&3–ம் எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இ.த.ச.பிரிவு.294(b)–ன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டு உள்ளதா? இல்லையா ? என்பதே ஆகும்.**

**(i) அ.சா.1–ன் சாட்சியத்தை பரிசீலிக்கையில்,**

**(6)** இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1 திரு.ரமேஷ் தனது நீதிமன்ற விசாரணையில், கடந்த 10.09.2022 அன்று காலை 04.45 மணியளவில் தான் வீட்டில் இருந்தபோது, யாரோ சிலர் கூட்டமா வந்து தன்னை தாக்கிவிட்டு சென்றதாகவும், தனக்கும் எதிரிகளுக்கும் பிரச்சனை இருந்து வந்ததால், எதிரிகள் தன்னை தாக்கியிருக்கக்கூடும் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் எதிரிகள் மீது புகார் வாக்குமூலம் கொடுத்ததாகவும் சாட்சியம் அளித்ததால், அரசு தரப்பு குறுக்கு விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டு, விசாரித்தபோதும், அரசு தரப்பிற்கு சாதகமாக பதிலளிக்கவில்லை.

இவரது சாட்சியமானது அ.சா.ஆ.2 புகார் வாக்குமூலத்தை நிரூபணம் செய்யும் வகையில் அமையவில்லை.

**(ii) இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2, அ.சா.3, அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகியோரின் சாட்சியங்களைப் பரிசீலிக்கையில்,**

**(7)** அ.சா.2 திருமதி.ராதா மற்றும் அ.சா.3 திரு.ஏழுமலை ஆகியோர் தங்களது நீதிமன்ற விசாரணையில், கடந்த 10.09.2022 அன்று காலை 04.45 மணியளவில் தாங்கள் வீட்டில் இருந்தபோது யாரோ சிலர் கூட்டமாக வந்து தங்களை தாக்கிவிட்டுச் சென்றதாகவும், தங்களுக்கும்



KOVENDHAN S
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

எதிரிகளுக்கும் பிரச்சனை இருந்து வந்ததால், எதிரிகள் தங்களைத் தாக்கியிருக்கக்கூடும் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அ.சா.1 எதிரிகளுக்கு எதிராகப் புகார் வாக்குமூலம் கொடுத்ததாகவும், அ.சா.4 காஞ்சனா மற்றும் அ.சா.5 ஸ்ரீதேவி தங்களது நீதிமன்ற விசாரணையில், "இவ்வழக்கு குறித்து தனக்கு எதுவும் தெரியாது" என்றும் சாட்சியம் அளித்துள்ளதால், இவர்களது சாட்சியமானது அரசு தரப்பு வழக்கிற்குப் பலன் அளிக்கவில்லை.

**(8)** இவ்வழக்கில் கூடுதல் சாட்சியாக சேர்த்து விசாரிக்கப்பட்ட காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் அ.சா.6 திரு.செல்வராஜ், இவ்வழக்கில் புலன் விசாரணை செய்த காவல் உதவி ஆய்வாளர் திரு.கணேசன் அ.சா.1–னிடம் (அ.சா.ஆ.2) புகார் வாக்குமூலம் (புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் – அ.சா.ஆ.1) பெற்று, (அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை) பதிவு செய்து, (அ.சா.ஆ.4) பார்வை மகஜர், (அ.சா.ஆ.5) மாதிரி வரைபடம், (அ.சா.ஆ.6) கைப்பற்றுதல் மகஜர், (அ.சா.ஆ.7) படிவம் 91 தயார் செய்தது, பட்டியல் சாட்சிகள் 1 முதல் 8 வரையிலானவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தது மற்றும் அ.சா.1–ற்கு சிகிச்சையளித்த மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து (அ.சா.ஆ.8) விபத்துப்பதிவேடு பெற்றது மற்றும் இவ்வழக்கின் புலன் விசாணையை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

**(9)** இவ்வழக்கின் ஆவணங்களையும், சாட்சியங்களையும், ஆராயும்போது, அ.சா.1 தனது புகார் வாக்குமூலத்தில், சம்பவத்தின்போது எதிரிகள் தன்னையும், தனது மனைவி மற்றும் மகனையும் அசிங்கமாகத் திட்டி அடித்து கொலை மிரட்டல் விடுத்ததாக் குறிப்பிட்டுள்ளபோதிலும்,


KOVENDHAN S
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

தனது நீதிமன்ற விசாரணையில் மேற்கண்ட குற்றச்சாட்டுக்கள் பற்றி எதிரிகளுக்கு எதிராகக் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்காததாலும், இதர அரசு தரப்பு சாட்சிகள் அனைவரும் இவ்வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதாலும், அரசு தரப்பில் மருத்துவரை சாட்சியாக விசாரிக்கத் தவறியுள்ளதாலும், புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டதாகக் கருதஇயலாது என்பதால், எதிரிகளின் மீதான குற்றச்சாட்டுக்களை, போதுமான சாட்சியங்களால் அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**<u>இறுதியாக,</u>**

**(10)** இவ்வழக்கில் 1-ம் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச.பிரிவுகள்.294(b), 323, 324(3 counts), 506(ii) of IPC மற்றும் 2&3-ம் எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இ.த.ச.பிரிவு.294(b)-இன் கீழான குற்றச்சாட்டுகளும், அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படாததால், எதிரிகளை மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று தீர்ப்பளித்து, Cr.P.C பிரிவு.248(1) of-இன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

**(11)** எதிரிகள் எழுதிக்கொடுத்த பிணையம் மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பிறகு இரத்து செய்து உத்தவிடப்படுகிறது.

**(12)** இவ்வழக்கில் **CP.No.248/2022**-ல் கண்ட வழக்குச்சொத்தான சுமார் 55செ.மீ நீளம் கொண்ட **உருட்டுக் கட்டை** ஒன்றை மேல்முறையீட்டுக் காலத்திற்குப்பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

KOVENDHAN S

Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

இத்தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்துத் தட்டச்சருக்குச் சொல்லச்சொல்ல, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, திருத்தங்களுக்குப் பிறகு 2026-ஆம் வருடம் ஜீன் மாதம் 05-ஆம் நாளான இன்று என்னால் அவையறியப் பகரப்பட்டது.

KOVENDHAN S

Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

நீதித்துறை நடுவர் எண்.II
திருப்பத்தூர்.

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>** :

| அரசு தரப்பு சாட்சிகள் | சாட்சியின் பெயர் | சாட்சியின் வகை |
|---|---|---|
| **அ.சா.1** | திரு.ரமேஷ் | புகார்தாரர் |
| **அ.சா.2** | திருமதி.ராதா | கண்ணுற்ற சாட்சி |
| **அ.சா.3** | திரு.ஏழுமலை | கண்ணுற்ற சாட்சி |
| **அ.சா.4** | திருமதி.காஞ்சனா | கண்ணுற்ற சாட்சி |
| **அ.சா.5** | திருமதி.ஸ்ரீதேவி | கண்ணுற்ற சாட்சி |
| **அ.சா.6** | திரு.செல்வராஜ் | இவ்வழக்கின் புலன் விசாரணை குறித்து சாட்சியம் அளித்த அதிகாரி |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள் :</u>**

| சான்றாவண எண். | சான்றாவணத்தின் வகை | சான்றளித்தவர்/ மெய்ப்பித்தவர் |
|---|---|---|
| **அ.சா.ஆ.1** | புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் | அ.சா.1 |
| **அ.சா.ஆ.2** | புகார் வாக்குமூலம் | அ.சா.6 |
| **அ.சா.ஆ.3** | முதல் தகவல் அறிக்கை | அ.சா.6 |
| **அ.சா.ஆ.4** | பார்வை மகஜர் | அ.சா.6 |

| | | |
|---|---|---|
| **அ.சா.ஆ.5** | மாதிரி வரைபடம் | அ.சா.6 |
| **அ.சா.ஆ.6** | கைப்பற்றுதல் மகஜர் | அ.சா.6 |
| **அ.சா.ஆ.7** | படிவம் – 91 | அ.சா.6 |
| **அ.சா.ஆ.8** | விபத்துப்பதிவேடு | அ.சா.6 |

**அரசு தரப்பு சான்று பொருள் – CP.248/2022**

| **சான்றுப் பொருள் எண்.** | **சான்றுப்பொருள்** | **சான்றளித்தவர்/ மெய்ப்பித்தவர்** |
|---|---|---|
| 1 | சுமார் 55செ.மீ நீளம் கொண்ட உருட்டுக் கட்டை | அ.சா.6 |

**எதிரி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை**

**எதிரி தரப்பு சான்று பொருள் – இல்லை**

KOVENDHAN S

Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

**நீதித்துறை நடுவர் எண்.2,**
**திருப்பத்தூர்.**

**பின்குறிப்பு**

1. எந்த சாட்சியும் 3 கேட்புரைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. விசாரணை சமயம் எதிரிகள் பிணையில் இருந்தனர்
3. வழக்கு முடிவு குறித்து சம்பந்தப்பட்ட காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
4. வழக்குச் சொத்து பற்றிய உத்தரவு வழக்குச் சொத்துக்கள் பதிவேட்டில் பதிய உத்தரவிடப்பட்டது.

**//உண்மை நகல்//**

KOVENDHAN S

Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

**நீதித்துறை நடுவர் எண்.2,**
**திருப்பத்தூர்.**